# கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி

## அசல் வழக்கு எண் : 14/2020

## நாள் : 18/07/2023, செவ்வாய்க்கிழமை

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - அசோக் | த/பெயர் - அப்பாவு |
| வயது - 27 | தொழில் - |
| விலாசம் - எண்.484, ராள்ளபாடி கிராமம், கொம்பு ரெட்டி கண்டிகை, ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**முதல் விசாரணை (PW1)**

நான் வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். 27/04/2003 தேதியிட்ட இறப்பு சான்றிதழின் நகல் வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17/06/2015 தேதியிட்ட வாரிசு சான்றிதழின் நகல் வா.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28/08/2015 தேதியிட்ட வாரிசு சான்றிதழின் நகல் வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா எண்.641 மற்றும் 632ன் நகல் வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா எண்.183 நகல் வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா எண்.433, 832 மற்றும் 435 நகல் வா.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதியின் ஆதார் அட்டை வா.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கறிஞர் அறிவிப்பு வா.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதிகள் 1, 3 மற்றும் 4லிருந்து ஒப்புகை அட்டை வா.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதிகள் 2, 5 மற்றும் 6 திரும்ப பெறப்பட்ட அறிவிப்பு வா.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**